**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

O.S.No.253/2025 பெயர் : ஆனந்தகுமார் நாள் : 15.07.2026

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

என் தந்தை உடல்நலம் சரியில்லாமல் தான் இறந்தார் என்றால், கடைசி 3 மாதங்கள் உடல்நலம் சரியில்லாமல் தான் இறந்தார். என் தந்தை நாச்சிமுத்து இறந்தபிறகு அவரது வங்கி கணக்கில் எவ்வளவு தொகை இருந்தது என்றால், எனக்கு தெரியாது. தங்க நகைகள் வங்கியில் டெபாசிட் செய்திருந்தாரா என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. 2005-ம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டப்படி நான், எனது அம்மா, எனது இரண்டு சகோதரர்களுக்கு சொத்துக்களில் சரிசம பாகம் உண்டு என்றால், எனக்கு அதைப்பற்றி தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை என்னால் படித்து பார்க்க முடியுமா என்றால், படித்து காண்பித்தால் கேட்டுக்கொள்வேன். நான் தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை பத்திரத்தில் எனக்கு மட்டும் அதிக பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். நானும், என் தாயாரும் கூட்டு சேர்ந்து தான் எனக்கு அதிக அளவு பங்கு கிடைக்கும் படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால், சரியல்ல. பாகப்பிரிவினைப் பத்திரத்தில் C ஷெட்யூல் சொத்தாக கமலாட்சியின் சொத்தும் சேர்க்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. C ஷெட்யூல் கமலாட்சி சொத்தை பிரிப்பதற்கு எங்களுக்கு வாதி பிரசன்னவெங்கடேஷ் அதிகாரம் கொடுத்தாரா என்றால், அவருக்கு இந்த சொத்தில் அதிகாரம் இல்லை. இந்து வாரிசுரிமைச்சட்டப்படி இறந்துபோன கமலாட்சியின் சொத்தை பெறுவதற்கு வாதி பிரசன்னவெங்கடேஷ் முழு உரிமை உள்ளது என்று சொன்னால், சரியல்ல. தாவாவில் கோரியுள்ளபடி வாதிக்கு பாதி பாகம் கிடைக்கத்தக்கது என்றால், சரியல்ல.